# ஸ்ரீ:

## ஸ்ரீ பிள்ளைலோகாசார்யர் அருளிய

# ஸ்ரீ வசநபூஷணம்

## முதல் ப்ரகரணம்

1. வேதார்த்தம் அறுதியிடுவது ஸ்ம்ருதி, இதிஹாஸ புராணங்களாலே.

2. ஸ்ம்ருதியாலே பூர்வபாகத்தில் அர்த்தம் அறுதியிடக்கடவது, மற்றை இரண்டாலும் உத்தர பாகத்தில் அர்த்தம் அறுதியிடக்கடவது.

3. இவை இரண்டிலும் வைத்துக்கொண்டு இதிஹாஸம் ப்ரபலம்.

4. அத்தாலே அது முற்பட்டது.

5. இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறை யிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது, மஹாபாரதத்தால் தூது போனவன் ஏற்றம் சொல்லுகிறது

6. இவை இரண்டாலும் புருஷகார வைபவமும் உபாய வைபவமும் சொல்லிற்றாயிற்று.

7. புருஷகார மாம்போது க்ருபையும் பாரதந்த்ர்யமும், அநந்யார்ஹத்வமும் வேணும்.

8. பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக, நடுவில் பிரிந்தது பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக, அநந்தரம் பிரிந்தது அநந்யார்ஹத் வத்தை வெளியிடுகைக்காக.

9. ஸம்ச்லேஷ விச்லேஷங்கள் இரண்டிலும் புருஷகாரத்வம் தோற்றும்.

10. ஸம்ச்லேஷ தசையில் ஈச்வரனைத் திருத்தும் விச்லேஷ தசையில் சேதனனைத் திருத்தும்.

11. இருவரையும் திருத்துவதும் உபதேசத்தாலே.

12. உபதேசத்தாலேஇருவருடையவும் கர்ம பாரதந்த்ர்யம் குலையும்.

13. உபதேசத்தால் மீளாத போது சேதனனை அருளாலே திருத்தும் ஈச்வரனை அழகாலே திருத்தும்.

14. அறியாத அர்த்தங்களை அடைய அறிவித்து, ஆசார்ய க்ருத்யத்தையும் புருஷகார க்ருத்யத்தையும் உபாய க்ருத்யத்தையும் தானே ஏறிட்டுக்கொள்ளுகையாலே மஹாபாரதத்தில் உபாய வைபவம் சொல்லிற்றாயிற்று.

15. புருஷகாரத்துக்கும் உபாயத்துக்கும் வைபவமாவது தோஷத்தையும் குணஹாநியையும் பார்த்து உபேக்ஷியாத அளவன்றிக்கே அங்கீகாரத்துக்கு அவை தன்னையே பச்சையாக்குகை.

16. இரண்டும் இரண்டும் குலையவேண்டும் என்றிருக்கில் இரண்டுக்கும் இரண்டும் உண்டாய்த்ததாம்.

17. இரண்டும் குலைந்தது என்றிருக்கில் இத்தலைக்கு இரண்டும் உண்டாயிற்றதாம்.

18. ராக்ஷஸிகள் தோஷம் ப்ரஸித்தம்.

19. ஜிதேந்த்ரியரில் தலைவனாய் ஆஸ்திகாக்ரேஸரனாய் கேசவஸ்ய ஆத்மா என்று க்ருஷ்ணனுக்கு தாரகனா யிருக்கிற அர்ஜுனனுக்கு தோஷம் ஏதென்னில். பந்துக்கள் பக்கல் ஸ்நேஹமும் காருண்யமும் வதபீதியும்.

20. த்ரௌபதீபரிபவம் கண்டிருந்தது க்ருஷ்ணாபிப்ராயத் தாலே ப்ரதாந தோஷம்.

21. பாண்டவர்க்களையும் நிரஸிக்க ப்ராப்தமா யிருக்க வைத்தது த்ரௌபதீயுடைய மங்கள ஸூத்ரத்துக்காக.

22. அர்ஜுனனுக்கு தூத்ய ஸாரத்யங்கள் பண்ணிற்றும் ப்ரபத்யுபதேசம் பண்ணிற்றும் இவளுக்காக.

23. ப்ரபத்திக்கு தேச நியமமும் கால நியமமும் ப்ரகார நியமமும் அதிகார நியமமும் பல நியமமும் இல்லை.

24. விஷய நியமமே உள்ளது.

25. கர்மத்திற்குப் புண்ய க்ஷேத்ரம் வஸந்தாதி காலம் சாஸ்த்ரோக்தங்களான தத்தத் ப்ரகாரங்கள் த்ரைவர்ணிகர் என்றிவை யெல்லம் வ்யவஸ்திதங்களா யிருக்கும்.

26. ஸ ஏஷ தேச: கால: என்கையாலே இதுக்கு தேச கால நியமமில்லை.

27. இவ்வர்த்தம் மந்திர ரத்நத்தில் ப்ரதம பததிலே ஸுஸ்பஷ்டம்.

28. ப்ரகார நியதி இல்லை என்னுமிடம் எங்கும் காணலாம்.

29. த்ரௌபதீ ஸ்நாதையா யன்றே ப்ரபத்தி பண்ணிற்று அர்ஜுனன் நீசர் நடுவேயிறே இவ்வர்த்தம் கேட்டது.

30. ஆகையால் சுத்யசுத்திகள் இரண்டும் தேடவேண்டா இருந்தபடியே அதிகாரியா மித்தனை.

31. இவ்விடத்திலே வேல்வெட்டிப்பிள்ளைக்குப் பிள்ளை அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

32. அதிகாரி நியமின்றிக்கே ஒழிந்தபடி என்? என்னில் தர்மபுத்ராதிகளும் த்ரௌபதியும் காகமும் காளியனும் ஸ்ரீ கஜேந்த்ராழ்வானும் ஸ்ரீ விபீஷணாழ்வானும் பெருமாளும் இளைய பெருமாளும் தொடக்கமானவர்கள் சரணம் புகுருகையாலே அதிகாரி நியமமில்லை.

33. பல நியமமின்றிக்கே ஒழிந்தபடி என் என்னில் தர்ம புத்ராதிகளுக்கு பலம் ராஜ்யம்; த்ரௌபதிக்கு பலம் வஸ்த்ரம் காகத்திற்கும் காளியனுக்கும் பலம் ப்ராணன்; ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு பலம் கைங்கர்யம்; ஸ்ரீ விபீ ஷணாழ்வானுக்கு பலம் ராமப்ராப்தி; பெருமாளுக்கு பலம் ஸமுத்ர தரணம்; இளையபெருமாளுக்கு பலம் ராமாநுவ்ருத்தி.

34. விஷய நியமமாவது குண பூர்த்தி உள்ள இடமே விஷயமாகை பூர்த்தியுள்ளதும் அர்ச்சாவதாரத்திலே.

35. ஆழ்வார்கள் பல இடங்களிலும் ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே.

36. பூர்ணம் எங்கையாலே எல்லா குணங்களும் புஷ்கலங்கள்.

37. ப்ரபத்திக்கு அபேக்ஷிதங்களான ஸௌலப்யாதிகள் இருட்டறையில் விளக்குப் போலே ப்ரகாசிப்பது இங்கே.

38. பூர்த்தியையும் ஸ்வாதந்த்ர்யத்தையும் குலைத்துக் கொண்டு தன்னை அநாதரிக்கிறவர்க்களைத் தான் ஆதரித்து நிற்கிற இடம்.

39. பூகத ஜலம் போலே அந்தர்யாமித்வம்; ஆவரண ஜலம் போலே பரத்வம்; பாற்கடல் போலே வ்யூஹம்; பெருக்காறு போலே விபவங்கள்; அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்.

40. இதுதான் சாஸ்த்ரங்களால் திருத்த வொண்ணாதே விஷயாந்தரங்களிலே மண்டி விழுகராய்ப் போரும் சேதனர்க்கு வைமுக்யத்தை மாற்றி ருசியை விளை விக்கக் கடவதாய் ருசி பிறந்தால் உபாயமாய், உபாய பரிக்ரஹம் பண்ணினால் போக்யமுமாயிருக்கும்.

41. இதில் ப்ரபத்தி பண்ணும் அதிகாரிகள் மூவர்.

42. அஜ்ஞரும், ஜ்ஞாநாதிகரும், பக்தி பரவசரும்.

43. அஜ்ஞானத்தாலே ப்ரபந்நர் அஸ்மதாதிகள்; ஜ்ஞாநாதிக்யத்தாலே ப்ரபந்நர் பூர்வாசார்யர்கள்; பக்தி பாரவச்யத்தாலே ப்ரபந்நர் ஆழ்வார்கள்.

44. இப்படிச் சொல்லுகிறதும் ஊற்றத்தைப் பற்ற.

45. இம்மூன்றும் மூன்று தத்வத்தையும் பற்றி வரும்.

46. 'என் நான் செய்கேன்' எங்கிறவிடதில் இம்மூன்றும் மூண்டு.

47. அங்கு ஒன்றைப் பற்றியிருக்கும்.

48. முக்க்யம் அதுவே.

49. 'அவித்யாத:' எங்கிற ச்லோகத்திலே இம் மூன்றும் சொல்லிற்று.

50. இதம் சரணம் அஜ்ஞாநாம்

51. பக்தி தன்னிலே அவஸ்தாபேதம் பிறந்தவாறே இதுதான் குலையக் கடவதாயிருக்கும்.

52. தன்னைப் பேணவும் பண்ணும் தரிக்கவும் பண்ணும்.

53. இந்த ஸ்வபாவ விசேஷங்கள் கல்யாண குணங்களிலும் திருச் சரங்களிலும், திருநாமங்களிலும், திருக் குழலோசையிலும் காணலாம்.

54. இதுதன்னைப் பார்த்தால் பிதாவுக்குப் புத்ரன் எழுத்து வாங்கும போலே இருப்ப்தொன்று.

55. இது தனக்கு ஸ்வரூபம் தன்னைப் பொறா தொழிகை.

56. அங்கம் தன்னை யொழிந்தவற்றைப் பொறாதொழிகை.

57. உபாயம் தன்னைப் பொறுக்கும். 58. உபாயாந்தரம் இரண்டையும் பொறுக்கும்.

59. இது இரண்டையும் பொறாது.

60. பலத்துக்கு ஆத்ம ஜ்ஞாநமும் அப்ரதிஷேதமுமே வேண்டுவது.

61. அல்லாதபோது பந்தத்துக்கும் பூர்த்திக்கும் கொத்தையாம்.

62. ஆபத்தைப் போக்கிக்கொள்ளுகிறோம் என்று ப்ரமித்து அத்தை விளைவித்துக் கொள்ளா தொழிகையே வேண்டுவது.

63. ரக்ஷணத்துக்கு அபேக்ஷிதம் ரக்ஷ்யத்வ–அநுமதியே.

64. எல்லா உபாயத்துக்கும் பொதுவாகையாலும், சைதந்ய கார்யமாகையாலும் ப்ராப்தி தசையிலும் அநுவர்த்திக் கையாலும் ஸ்வருபாதிரேகி யல்லாமையாலும் அசித் வ்யாவ்ருத்தி வேஷத்தை ஸாதநமாக்க வொண்ணாது.

65. அசித் வ்யாவ்ருத்திக்கு ப்ரயோஜநம் உபாயத்தில் உபகார ஸ்ம்ருதியும் உபேயத்தில் உகப்பும்.

66. 'உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்?' எங்கிற படியே ப்ராப்திக்கு உபாயம் அவன் நினைவு. ப்ராப்தி – விரும்பிப் பெறுவது.

67. அதுதான் எப்போது முண்டு.

68. அது பலிப்பது இவன் நினைவு மாறினால் அது–அவன் நினைவு.

69. 'அந்திம காலத்துக்குத் தஞ்சம், இப்போது தஞ்சம் என்? எங்கிற நினைவு குலைகை' என்று ஜீயர் அருளிச்செய்வர்.

70. ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானவனும் அவனே.

71. ஸ்வயத்ந நிவ்ருத்தி பாரதந்த்ர்ய பலம் ஸ்வபரயோஜந நிவ்ருத்தி சேஷத்வ பலம்.

72. பரப்ரயோஜந ப்ரவ்ருத்தி ப்ரயத்ந பலம் தத்விஷய ப்ரீதி சைதன்ய பலம்.

73. அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்த மென்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிருபகம்.

74. இது தான் வந்தேறி யன்று.

75. ஸ்வதந்த்ர்யமும் அந்ய சேஷத்வமும் வந்தேறி.

76. சேஷத்வ விரோதி ஸ்வாதந்த்ர்யம் தச்சேஷத்வ விரோதி ததிதர சேஷத்வம்.

77. அஹங்காரமாகிற ஆர்ப்பைத் துடைத்தால் ஆத்மாவுக்கு அழியாத பேர் அடியான் என்றிறே.

78. க்ராம குலாதிகளால் வரும் பேர் அநர்த்த ஹேது.

79. ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய:

80. உபாயத்துக்குப் பிராட்டியையும் த்ரௌபதியையும் திருகண்ணமங்கை யாண்டாளையும் போலே இருக்க வேண்டும்; உபேயத்துக்கு இளையபெருமாளையும் பெரிய வுடையாரையும் பிள்ளைதிருநறையூர் அரையரையும் சிந்தயந்தியையும் போலே இருக்கவேண்டும்.

81. பிராட்டிக்கும் த்ரௌபதிக்கும் வாசி சக்தியும் அசக்தியும்.

82. பிராட்டி ஸ்வசக்தியை விட்டாள், த்ரௌபதீ லஜ்ஜையை விட்டாள் திருக்கண்ணமங்கையாண்டான் ஸ்வ வ்யாபாரத்தை– விட்டான்.

83. பசியார யிருப்பார் அட்ட சோறும் உண்ணவேணும், அடுகிற சோறும் உண்ண வேணும் என்னுமா போலே காட்டுக்குப் போகிறபோது இளையபெருமாள் பிரியில் தரியாமையை முன்னிட்டு அடிமை செய்யவேணும், ஏவிக்கொள்ளவேணும் என்றார், படைவீட்டில் புகுந்த பின்பு காட்டில் தனியிடத்தில் ஸ்வயம் பாகத்திலே வயிற்றைப் பெருக்கினபடியாலே ஒப்பூண் உண்ணமாட்டாதே ஒரு திருக்கையாலே திருவெண்கொ– ற்றக்குடையையும் ஒரு கையாலே

திருவெண்சாமரத்தையும் தரித்து அடிமை செய்தார்.

84. பெரிய உடையாரும் பிள்ளை திருநறையூர் அரையரும் உடம்பை உபேக்ஷித்தார்கள், சிந்தயந்திக்கு உடம்பு தன்னடையே போயிற்று.

85. உபாயத்துக்கு சக்தியும் லஜ்ஜையும் யத்நமும் குலைய வேண்டும்; உபேயத்துக்கு ப்ரேமமும் தன்னைப் பேணாமையும் தரியாமையும் வேணும்.

86. இவனுக்கு வைதமாய் வருமதிறே த்யஜிக்கலாவது ராகப் ப்ராப்தமாய் வருமது த்யஜிக்க வொண்ணாதிறே.

87. உபாயத்வாநுஸந்தாநம் நிவர்த்தகம் உபேயத்வாநு ஸந்தாநம் ப்ரவர்த்தகம்.

88. அப்ராப்த விஷயங்களிலே ஸக்தனானவன் அது லபிக்கவேணும் என்றிரா நின்றால், ப்ராப்த விஷயப்ரவணனுக்குச் சொல்லவேண்டாவிறே.

89. அநுஷ்டாநமும் அநநுஷ்டாநமும் உபாய கோடியிலே அந்வயியாது.

90. அநந்யோபாயத்வமும் அநந்யோபேயத்வமும் அநந்யதை வத்வமும் குலையும் படியான ப்ரவருத்தி காணாநின்றோமிறே.

91. ஜ்ஞாந விபாக கார்யமான அஜ்ஞானத்தாலே வருமவை எல்லாம் அடிக்கழஞ்சு பெறும்.

92. உபாய பலமாய் உபேயாந்தர்ப்பூதமாய் இருக்குமது உபாய ப்ரதிபந்தக மாகாது.

93. ஸாத்ய ஸமாநம் விளம்பாஸஹ மென்றிறே ஸாதநத்துக் கேற்றம்; ஸாத்ய ப்ராவண்ய மடியாகவிறே ஸாதநத்தில் இழிகிறது.

94. இவனுக்கு பிறக்கும் ஆத்மகுணங்கள் எல்லாவற்றுக்கும் ப்ரதாந ஹேது இந்த ப்ராவண்யம்.

95. 'மாற்பால் மனம் சுழிப்ப', 'பரமாத்மநி யோ ரத்த:' 'கண்டு கேட்டு உற்று மோந்து.'

96. ஆத்ம குணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்.

97. இவை இரண்டும் உண்டானால் ஆசார்யன் கைபுகுரும்; ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந் த்ரம் கைபுகுரும்; திருமந்த்ரம் கைபுகுந்தவாறே ஈச்வரன் கைபுகுரும்; ஈச்வரன் கைபுகுந்தவாறே 'வைகுந்தமாநகர் மற்றது கையதுவே' எங்கிறபடியே ப்ராப்ய பூமிகைபுகுரும்.

98. ப்ராப்ய லாபம் ப்ராபகத்தாலே ப்ராபக லாபம் திருமந்த்ரத்தாலே, திருமந்த்ர லாபம் ஆசார்யனாலே ஆசார்ய லாபம் ஆத்ம குணத்தாலே.

99. இதுதான் ஐச்வர்ய காமர்க்கும் உபாஸகர்க்கும் ப்ரபந்நர்க்கும் வேணும்.

100. மூவரிலும் வைத்துக்கொண்டு மிகவும் வேண்டுவது ப்ரபந்நனுக்கு.

101. மற்றை இருவர்க்கும் நிஷித்த விஷய நிவ்ருத்தியே அமையும்; ப்ரபந்நனுக்கு விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்.

102. இதுதான் சிலர்க்கு அழகாலே பிறக்கும்; சிலர்க்கு அருளாலே பிறக்கும்; சிலர்க்கு ஆசாரத்தாலே பிறக்கும்.

103. பிறக்கும் க்ரமம் என் என்னில் அழகு அஜ்ஞாநத்தை விளைவிக்கும்; அருள் அருசியை விளைவிக்கும்; ஆசாரம் அச்சத்தை விளைவிக்கும்.

104. இவையும் ஊற்றத்தைப் பற்றச் சொல்லுகிறது.

105. அருசி பிறக்கும் போதைக்கு தோஷ தர்சநம் அபேக்ஷிதமா யிருக்கும்.

106. அது ப்ரதாந ஹேதுவன்று.

107. அப்ராப்ததையே ப்ராதாந ஹேது.

108. பகவத் விஷயத்தில் இழிகிறது குணம் கண்டன்று ஸ்வரூப ப்ராப்தம் என்று.

109. இப்படிக் கொள்ளாதபோது குண ஹீந மென்று நினைத்த தசையில் பகவத் விஷய ப்ரவ்ருத்தியும்; தோஷாநுஸந்தாந தசையில் ஸம்ஸாரத்தில் ப்ரவ்ருத்தியும் கூடாது.

110. 'கொடிய என் நெஞ்சம் அவன் என்றே கிடக்கும்' 'அடியேன் நான் பின்னும் உன் சேவடியன்றி நயவேன்' என்னாநின்றார்களிறே.

111. குண க்ருத தாஸ்யத்திலுங் காட்டில் ஸ்வரூப ப்ரயுக்த மான தாஸ்யமிறே ப்ரதாநம்.

112. அநஸூயைக்குப் பிராட்டி அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

113. பகவத் விஷய ப்ரவ்ருத்தி பின்னை சேருமோ வென்னில், அதுக்கடி ப்ராவணயம்; அதுக்கடி ஸம்பந்தம்; அதுதான் ஔபாதிக மன்று, ஸத்தா ப்ரயுக்தம்.

114. அந்த ஸத்தை ப்ராவண்ய கார்யமான அனுபவ மில்லதபோது குலையும்; அது குலையாமைக்காக வருமவை எல்லாம் அவர்ஜநீயங்களுமாய் ப்ராப்தங்களுமாய் இருக்கும், ஆகையால் பகவத் விஷய ப்ரவ்ருத்தி சேரும்.

# இரண்டாம் ப்ரகரணம்

115 ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கும் அஜ்ஞாந அசக்திளன்று; ஸ்வரூப விரோதமே ப்ரதாந ஹேது.

116 ப்ராபகாந்தரம் அஜ்ஞருக்கு உபாயம்.

117 ஜ்ஞாநிகளுக்கு அபாயம்.

118 அபாய மாயிற்றது ஸ்வரூப நாசத்தாலே.

119 "நெறி காட்டி நீக்குதியோ?" என்னா நின்றதிறே நெறி – வழி வேறு உபாயம்.

120 "வர்த்ததே மே மஹத் பயம்" என்கையாலே பயஜநகம்; "மாசுச:" என்கையாலே சோக ஜநகம்.

121 இப்படிக் கொள்ளாதபோது ஏதத் ப்ரவ்ருத்தியில் ப்ராயச்சித்த விதி கூடாது.

122 திருக்குருகைப்பிரான்பிள்ளான் பணிக்கும்படி: மதிர பிந்து மிச்ரமான சாதகும்ப மய கும்பகத தீர்த்த ஸலிலம் போலே அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்.

123 ரத்நத்துக்குப் பலகரை போலேயும், ராஜ்யத்துக்கு எழுமிச்சம்பழம் போலேயும், பலத்துக்கு ஸத்ருச மன்று.

124 தான் தரித் ரனாகையாலே தனக்குக் கொடுக்கலா வது ஒன்றில்லை.

125 அவன் தந்தத்தைக் கொடுக்குமிடத்தில் அடைவிலே கொடுக்கில் அநுபாயமாம்; அடைவு கெடக் கொடுக்கில் களவு வெளிப்படும்.

126 பர்த்ரு போகத்தை வயிறு வளர்க்கைக்கு உறுப்பாக்குமா போலே இருவர்க்கும் அவத்யம்.

127 வேதங்கள் உபாயமாக விதிக்கின்றபடி என் என்னில்.

128 ஔஷத ஸேவை பண்ணாதவர்களுக்கு அபிமதவஸ்துக்களிலே அத்தைக் கலசி இடுவாரைப் போலே ஈச்வரனைக் கலந்து விதிக்கிறதித்தனை.

129 இத்தை ப்ரவர்த்திப்பித்தது பர ஹிம்ஸையை நிவர்த்திப் பதற்காக.

130 இதுதான் பூர்வ விஹித ஹிம்ஸை போலே; விதிநிஷே தங்கள் இரண்டுக்கும் குறையில்லை.

131 அத்தை சாஸ்த்ர விச்வாஸத்துக்காக விதித்தது; இத்தை ஸ்வரூப விச்வாஸத்துக்காக் விதித்தது.

132 அது தோல் புரையே போம்; இது மர்ம ஸ்பர்சி.

133 இதுதான் கர்ம ஸாத்ய மாகையாலே துஷ்கரமுமாயிருக்கும்.

134 ப்ரபத்யுபாயத்துக்கு இக்குற்றங்கள் ஒன்றுமில்லை.

135 ஆத்ம யாதாத்ம்ய ஜ்ஞாந கார்ய மாகையாலே ஸ்வரூபத்துக்கு உசிதமுமாய், "சிற்ற வேண்டா" எங்கிற படியே நிவ்ருத்தி ஸாத்ய மாகையாலே ஸுகரமுமாயிருக்கும்.

136 பூர்ண விஷய மாகையாலே பெருமைக் கீடாகப் பச்சை யிடவொண்ணாது.

137 ஆபிமுக்ய ஸூசக மாத்ரத்திலே ஸந்தோஷம் விளையும்.

138 பூர்த்தி கைவாங்காதே மேல் விழுகைக்கு ஹேது இத்தனை.

139 "பத்ரம் புஷ்பம்", "அந்யத் பூர்ணாத்", "புரிவதுவும் புகை பூவே".

140 புல்லைக் காட்டி அழைத்துப் புல்லை இடுவாரைப் போலே பல ஸாதநங்களுக்குப் பேதமில்லை.

141 ஆகையால் ஸுகரூபமா யிருக்கும்.

142 இவன் அவனைப் பெற நினைக்கும்போது இந்த ப்ரபத்தியும் உபாயமன்று.

143 அவன் இவனைப் பெற நினைக்கும்போது பாதகமும் விலக்கன்று.

144 இவை இரண்டும் ஸ்ரீ பரதாழ்வான் பக்கலிலும் ஸ்ரீ குஹப்பெருமாள் பக்கலிலும் காணலாம்.

145 ஸ்ரீ பாரதாழ்வானுக்கு நன்மைதானே தீமை யாயிய்ற்று; ஸ்ரீ குஹப்பெருமாளுக்குத் தீமைதானே நன்மை யாயிற்று.

146 ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபத்தி தானும் அபராத கோடியிலிலேயாய் க்ஷாமணம் பண்ண வேண்டும்படி நில்லா நின்றதிறே.

147 நெடுநாள் அந்யபரையாய்ப் போந்த பார்யை லஜ்ஜா பயங்களின்றிக்கே பர்த்ரு ஸகாசத்திலே நின்று, "என்னை அங்கீகரிக்கவேணும்" என்று அபேக்ஷிக்குமா போலே இருப்ப தொன்றிறே இவன் பண்ணும் ப்ரபத்தி.

148 க்ருபையால் வரும் பாரதந்த்ர்யத்திற் காட்டில் ஸ்வாதந்த்ர்யத்தால் வரும் பாரதந்த்ர்யம் ப்ரபலம்.

149 இவ்வர்த்தத்தை வேத புருஷன் விரும்பினான்.

150 அபேக்ஷா நிரபேக்ஷமாகத் திருவடிக்கும் ஸ்ரீ குஹப்பெருமாளுக்கும் இது உண்டாயிற்று.

151 இவன் முன்னிடு மவர்களை அவன் முன்னிடும் என்னுமிடம் அபய ப்ரதாநத்திலும் காணலாம்.

152 இருவர் முன்னிடுவதும் தந்தாம் குற்றங்களை சமிப்பிக்கைக்காக.

153 ஸ்வரூப ஸித்தியும் அத்தாலே.

154 ஔபாதிகமுமாய் நித்யமுமான பாரதந்த்ர்யம் இருவர்க்கும் உண்டிறே.

155 அநித்யமான இருவர் பாரதந்த்ர்யமும் குலைவதும் அத்தாலே.

156 ஸஸாக்ஷிக மாகையாலே இப்பந்தத்தை இருவராலும் இல்லை செய்யப் போகாது.

157 "என்னை நெகிழ்க்கிலும்" "கோல மலர்ப் பாவைக்கும் அன்பாகிய."

158 கர்மணி வ்யுத்பத்தியில் ஸ்வரூப ரூப குணங்களால் வருகிற கர்த்ரு ஸங்கோச ராஹித்யத்தை நினைப்பது.

159 அதிகாரி த்ரயத்துக்கும் புருஷகாரம் அவர்ஜநீயம்.

160 தனக்குத்தான் தேடும் நன்மை தீமை யோபாதி விலக்காயிருக்கும்.

161 அழகு கிட்ட சட்டை அணைக்கைக்கு விரோதி யாமா போலே.

162 "ஹாரோSபி"

163 புண்யம் போலே பாரதந்த்ர்யமும் பராநுபவத்துக்கு விலக்கு.

164 குணம் போலே தோஷ நிவ்ருத்தி.

165 ஆபரணம் அநபிமதமாய் அழுக்கு அபிமதமா யிரா நின்றதிறே.

166 "ஸ்நாநம் ரோஷ ஜநகம்" என்கிற வார்த்தையை ஸ்மரிப்பது.

167 "வஞ்சக் கள்வன்" "மங்க வொட்டு."

168 வேர் சூடுமவர்கள் மண் பற்றுக் கழற்றாதாப் போலே ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே ஆதரிக்கும்.

169 பரமார்த்தனான இவனுடைய சரீர ஸ்திதிக்கு ஹேது கேவல பகவ திச்சையிறே.

170 "திருமாலிருஞ்சோலை மலையே" எங்கிறபடியே உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய சரீரைக தேசத்திலே பண்ணும்.

171 அங்குத்தை வாஸம் ஸாதநம், இங்குத்தை வாஸம் ஸாத்யம்.

172 "கல்லுங் கனைகடலும்" என்கிறபடியே இது ஸித்தித்தால் அவற்றில் ஆதரம் மட்டமா யிருக்கும்.

173 "இளங்கோயில் கைவிடேல்" என்றிவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியா யிருக்கும்.

174 ப்ராப்ய ப்ரீதி விஷயத்வத்தாலும், க்ருதஜ்ஞதையாலும் பின்பவை அபிமதங்காளா யிருக்கும்.

175 ஆகையாலே தோஷ நிவ்ருத்தி போலே ஆந்தர குணமும் விரோதியா யிருக்கும்.

176 தோஷ நிவ்ருத்திதானே தோஷமாமிறே.

177 "தன்னால் வரும் நன்மை விலைப்பால் போலே அவனால் வரும் நன்மை முலைப்பால் போலே" என்று பிள்ளான் வார்த்தை.

178 அவனை யொழியத் தான் தனக்கு நன்மை தேடுகையாவது: ஸ்தனந்தய ப்ரஜையை மாதா பிதாக்கள் கையினின்றும் வாங்கி காதுகனான ஆட்டுவாணியன் கையிலே காட்டிக் கொடுக்குமா போலே இருப்பதொன்று.

179 தன்னைத் தானேயிறே முடிப்பான்.

180 தன்னைத் தானே முடிக்கையாவது – அஹங்காரத்தையும் விஷயங்களையும் விரும்புகை.

181 அஹங்காரம் அக்நி ஸ்பர்சம் போலே.

182 "ந காமகலுஷம் சித்தம்" "நஹி மே ஜீவிதே நார்த்த:" "ந தேஹம்" "எம்மா வீட்டுத் திறமும்."

183 ப்ரதிகூல விஷய ஸ்பர்சம் விஷ ஸ்பர்சம் போலே; அநுகூல விஷய ஸ்பர்சம் விஷ மிச்ர போஜநம் போலே.

184 அக்நி ஜ்வாலையை விழுங்கி விடாய் கெட நினைக்குமா போலேயும், ஆடுகிற பாம்பின் நிழலிலே ஓதுங்க நினைக்குமா போலேயும் விஷய ப்ரவணனாய் ஸுகிக்க நினைக்கை.

185 அசுணமா முடியுமா போலே பகவ தநுபவைக பரனாய், ம்ருது ப்ரக்ருதியா யிருக்குமவன் விஷய தர்சனத்தாலே முடியும்படி.

186 "காட்டிப் படுப்பாயோ?" எனக் கடவதிறே.

187 அஜ்ஞனான விஷய ப்ரவணன் கேவல நாஸ்திகனைப் போலே, ஜ்ஞாநவானான விஷய ப்ரவணன் ஆஸ்திக நாஸ்திகனைப் போலே.

188 கேவல நாஸ்திகனைத் திருத்தலாம்; ஆஸ்திக நாஸ்திகனை ஒரு நாளும் திருத்த வொண்ணாது.

189 இவை இரண்டும் ஸ்வரூபேண முடிக்கு மளவன்றிக்கே பாகவத விரோதத்தையும் விளைத்து முடிக்கும்.

190 நாம ரூபங்களை உடையராய் பாகவத விரோதம் பண்ணிப் போருமவர்க்கள் தக்த படம் போலே.

191 மடிப்புடவை வெந்தால் உண்டையும் பாவு மொத்துக் கிடக்கும்; காற்றடித்தவாறே பறந்துபோம்.

192 "ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை: என்று ஜீயர் அருளிச்செய்வர்.

193 "அவமாந க்ரியா"

194 பாகவதாபசாரந்தான் அநேக விதம்.

195 அதிலே ஒன்று அவர்கள் பக்கல் ஜந்ம நிருபணம்.

196 இதுதான் அர்ச்சாவதாரத்தில் உபாதாந ஸ்ம்ருதியிலுங் காட்டில் க்ரூரம்.

197 அத்தை மாத்ரு யோநி பரீக்ஷையோ டொக்கும் என்று சாஸ்த்ரம் சொல்லும்.

198 த்ரிசங்குவைப் போலே கர்ம சண்டாளனாய் மார்விலிட்ட யஜ்ஞோபவீதந் தானே வாராய் விடும்.

199 ஜாதி சண்டாளனுக்குக் காலாந்தரத்திலே பாகவதனாகைக்கு யோக்யதை உண்டு; அதுவுமில்லை இவனுக்கு.

200 ஆரூட பதிதனாகையாலே.

201 இது தனக்கு அதிகாரி நியமமில்லை.

202 "தமர்க்களில் தலைவராய சாதி அந்தணர்களேனும்" என்கையாலே.

203 இவ்விடத்திலே வைநதேய வ்ருத்தாந்தத்தையும் பிள்ளைப்பிள்ளை யாழ்வானுக்கு ஆழ்வான் பணித்தவார்த்தையையும் ஸ்மரிப்பது.

204 ஜ்ஞாநா நுஷ்டானங்களை ஒழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள் பக்கல் ஸம்பந்தமே அமைகிறாப் போலே அவை உண்டானாலும் இழவுக்கு அவர்கள் பக்கல் அபசாரமே போரும்.

205 இதில் ஜந்ம வ்ருத்தாதி நியமமில்லை.

206 இவ்வர்த்தம் கைசிக வ்ருத்தாந்தத்திலும் உபரிசர வஸூ வ்ருத்தாந்தத்திலும் காணலாம்.

207 ப்ராஹ்மண்யம் விலை செல்லுகிறது வேதாத்யயநாதி முகத்தாலே பகவல்லாப ஹேது என்று, அதுதானே இழவுக்கு உறுப்பாகில் த்யாஜ்ய மாமிறே.

208 ஜந்ம வ்ருத்தங்களினுடைய உத்கர்ஷமும் அபகர்ஷமும் பேற்றுக்கும் இழவுக்கும் அப்ரயோஜகம்.

209 ப்ரயோஜகம் பகவத் ஸம்பந்தமும் தததஸம்பந்தமும்

210 பகவத் ஸம்பந்தம் உண்டானால் இரண்டும் ஒக்குமோ என்னில்.

211 ஒவ்வாது

212 உத்க்ருஷ்டமாக ப்ரமித்த ஜன்மம் ப்ரம்சஸம் பாவனையாலே, "சரீரேச" எங்கிறபடியே பயஜநகம்.

213 அதுக்கு ஸ்வரூப ப்ராப்தமான நைச்யம் பாவிக்கவேணும்.

214 அபக்ருஷ்டமாக ப்ரமித்த உத்க்ருஷ்ட ஜன்மத்துக்கு இரண்டு தோஷமுமில்லை.

215 நைச்யம் ஜந்ம ஸித்தம்.

216 ஆகையாலே உத்க்ருஷ்ட ஜன்மமே ச்ரேஷ்டம்.

217 "ச்வபசோSபி மஹீபால!"

218 நிக்ருஷ்ட ஜன்மத்தால் வந்த தோஷம் சமிப்பது விலக்ஷண ஸம்பந்தத்தாலே.

219 ஸம்பந்தத்துக்கு யோக்யதை உண்டாம்போது ஜன்மக் கொத்தை போகவேண்டும்.

220 ஜன்மத்துக்குக் கொத்தையும், அதுக்குப் பரிஹாரமும் "பழுதிலா ஒழுகல்" என்ற பாட்டிலே அருளிச்செய்தார்.

221 வேதகப் பொன் போலே இவர்களோட்டை ஸம்பந்தம்.

222 இவர்கள் பக்கல் ஸாம்ய புத்தியும் ஆதிக்ய புத்தியும் நடக்க வேண்டும்.

223 அதாவது, ஆசார்ய துல்யர் என்றும் ஸம்ஸாரிகளிலும் தன்னிலும் ஈச்வரனிலும் அதிகர் என்றும் நினைக்கை.

224 ஆசார்ய ஸாம்யத்துக்கடி ஆசார்ய வசநம்.

225 இப்படி நினையா தொழிகையும் அபசாரம்.

226 இவ்வர்த்தம் இதிஹாஸ புராணங்களிலும், பயிலுஞ்சுடரொளி, நெடுமாற் கடிமையிலும், கண்சோர வெங்குருதியிலும், நண்ணாத வாளவுணரிலும், தேட்டருந் திறல் தேனிலும், மேம்பொருளுக்கு மேலில் பாட்டுக்களிலும் விசதமாகக் காணலாம்.

227 க்ஷத்ரியனான விச்வாமித்ரன் ப்ரஹ்மரிஷி யானான்.

228 ஸ்ரீ விபீஷணனை ராவணன் குலபாம்ஸந மென்றான்; பெருமாள் இக்ஷ்வாகு வம்ச்யராக நினைத்து வார்த்தை அருளிச் செய்தார்.

229 பெரிய வுடையார்க்குப் பெருமாள் ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் பண்ணியருளினார்.

230 தர்மபுத்ரர் அசரீரி வாக்யத்தையும், ஜ்ஞாநாதிக்யத்தையும் கொண்டு ஸ்ரீ விதுரரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்தார்.

231 ருஷிகள் தர்மவ்யாதன் வாசலிலே துவண்டு தர்ம ஸந்தேஹங்களை சமிப்பித்துக்கொண்டார்கள்.

232 க்ருஷ்ணன் பீஷ்ம த்ரோணாதிகள் க்ருஹங்களை விட்டு ஸ்ரீ விதுரர் திருமாளிகையிலே அமுது செய்தான்.

233 பெருமாள் ஸ்ரீ சபரி கையாலே அமுது செய்தருளினார்.

234 மாரனேரி நம்பி விஷயமாகப் பெரியநம்பி உடையவர்க் கருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.

235 "ப்ராதுர்பாவை:" இத்யாதி.

236 பாகவதனன்றிக்கே வேதார்த்த ஜ்ஞாநாதிகளையுடையவன் குங்குமம் சுமந்த கழுதையோபாதி என்று சொல்லாநின்றதிறே.

237 ராஜாவான குலசேகரப்பெருமாள் திர்யக் ஸ்தாவர ஜன்மங்களை ஆசைப்பட்டார்.

238 ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வாரும் திருமகளாரும் கோப ஜன்மத்தை ஆஸ்தாநம் பண்ணினார்கள்.

239 கந்தல் கழிந்தால் ஸர்வர்க்கும் நாரீணா முத்தமையுடைய அவஸ்த்தை வரக்கடவதா யிருக்கும்.

240 ஆறு ப்ரகாரத்தாலே பரிசுத்த ஆத்ம ஸ்வரூபத்துக்கும் தத்ஸாம்யம் உண்டாயிருக்கும்.

241 த்ருஷ்டத்தில் உத்கர்ஷம் அஹங்காரத்தாலே, அத்ருஷ்டத்தில் உத்கர்ஷம் அஹங்கார ராஹித்யத்தாலே.

242 ப்ரஹ்மாவாய் இழந்து போதல், இடைச்சியாய்ப் பெற்று விடுதல் செய்வதாயிருக்கும்.

243 இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் நாச ஹேதுவான அஹங்காரத்துக்கும், அதனுடைய கார்யமான விஷய ப்ராவண்யத்துக்கும் விளைநிலம் தானாகையாலே

தன்னைக் கண்டால் சத்ருவைக் கண்டால் போலேயும், அவற்றுக்கு வர்த்தகரான ஸம்ஸாரிகளைக் கண்டால் ஸர்ப்பத்தைக் கண்டால் போலேயும், அவற்றுக்கு நிவர்த்தகரான ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் பந்துக்களைக் கண்டால் போலேயும், ஈஸ்வரனைக் கண்டால் பிதாவைக் போலேயும், ஆசார்யனைக் கண்டால் பசியன் சோற்றைக் கண்டால் போலேயும், சிஷ்யனைக் கண்டால் அபிமத விஷயத்தைக் கண்டால் போலேயும் நினைத்து,

அஹங்காரார்த்த காமங்கள் மூன்றும் அநுகூலர் பக்கல் அநாதரத்தையும், ப்ரதிகூலர் பக்கல் ப்ராவண்யத்தையும், உபேக்ஷிக்குமவர்கள் பக்கல் அபேக்ஷையும் பிறப்பிக்கும் என்றஞ்சி,

ஆத்ம குணங்கள் தம்மாலும் பிறராலும் பிறப்பித்துக்கொள்ள ஒண்ணாது; ஸதாசார்ய ப்ரஸாதமடியாக வருகிற பகவத் ப்ரஸாதத்தாலே பிறக்கு மத்தனை என்று துணிந்து.

தேஹ யாத்ரையில் உபேக்ஷையும், ஆத்ம யாத்ரையில் அபேக்ஷையும், ப்ராக்ருத வஸ்துக்களில் போக்யதா புத்தி நிவ்ருத்தியும், தேஹதாரணம் பரமாத்ம ஸமாராதந ஸமாப்தி ப்ரஸாத ப்ரதிபத்தி என்கிற புத்தி விசேஷமும்,

தனக்கொரு க்லேசம் உண்டானால் கர்மபலம் என்றாதல், க்ருபாபலம் என்றாதல் பிறக்கும் ப்ரீதியும்,

ஸ்வாநுஷ்டாநத்தில் ஸாதநத்வ புத்தி நிவ்ருத்தியும், விலக்ஷணருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களில் வாஞ்சையும், உகந்தருளின நிலங்களில் ஆதராதிசயமும், மங்களாசாஸநமும், இதர விஷயங்களில் அருசியும், ஆர்த்தியும் அநுவர்த்தந நியதியும், ஆஹார நியதியும், அநுகூலஸஹவாஸமும், ப்ரதிகூல ஸஹவாஸ நிவ்ருத்தியும்,

ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன்.

# மூன்றாம் ப்ரகரணம்

244 மங்களாசாஸநம் ஸ்வரூப விருத்த மன்றோ என்னில் ஜ்ஞாந தசையில் ரக்ஷ்ய பாவம் தன் கப்பிலே கிடக்கும்; ப்ரேம தசையில் தட்டுமாறிக் கிடக்கும்.

245 அவன் ஸ்வரூபத்தை அநுஸந்தித்தால் அவனைக் கடகாகக் கொண்டு தன்னை நோக்கும்; ஸௌகுமார்யத்தை அநுஸந்தித்தால் தன்னைக் கடகாகக் கொண்டு அவனை நோக்கும்.

246 இவ்வர்த்தம் சக்ரவர்த்தி ஸ்ரீ ஜநகராஜன், திருமகள் விச்வாமித்ரன், ஸ்ரீ தண்டகாரண்யவாஸிகளானரிஷிகள், திருவடி, மஹாராஜர், ஸ்ரீ நந்தகோபர், ஸ்ரீவிதுரர், பிள்ளையுறங்காவில்லி தாஸர் தொடக்கமானவர்கள் பக்கலிலே காணலாம்.

247 இளையபெருமாளை ஸ்ரீகுஹப்பெருமாள் அதிசங்கைபண்ண, இருவரையும் அதிசங்கை பண்ணி ஸ்ரீகுஹப்பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிறே.

248 ஒரு நாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகு படுத்தும் பாடாயிற்று.

249 இவர்கள் நம்முடைய கோடியிலே என்னும்படியாயிற்று, ஆழ்வார்கள் நிலை.

250 ஆழ்வார்கள் எல்லாரையும் போலல்லர் பெரியாழ்வார்.

251 அவர்களுக்கு இது காதாசித்கம், இவர்க்கிது நித்யம்.

252 அவர்களது ஆழங்கால்தானே இவர்க்கு மேடாயிருக்கும்.

253 அவர்களுக்கு உபய சேஷத்வத்தையும் அழித்து ஸ்வரூபத்தைக் குமிழ்நிர் உண்ணப் பண்ணுமது, இவர்க்கு உபய வ்ருத்திக்கும் ஹேதுவாய் ஸ்வரூபத்தைக் கரையேற்றும்.

254 பயநிவர்த்தகங்களுக்கு பயப்படுவது, ப்ரதிகூலரையும் அநுகூல ராக்கிக்கொள்வது, அதீத காலங்களில் அபதாநங்களுக்கு உத்தர காலத்திலே வயிறெறிவது, ப்ராப்தி பலமும் இதுவே என்பது, அநிமிஷரைப் பார்த்து, "உறகல் உறகல்" என்பதாய்க் கொண்டு இது தானே யாத்திரையாய் நடக்கும்.

255 அல்லாதவர்களைப் போலே கேட்கிறவர்களுடையவும், சொல்லுகிறவர்களுடையவும் தனிமையைத் தவிர்க்கை யன்றிக்கே ஆளுமாளார் என்கிறவனுடைய தனிமையைத் தவிர்க்கைக்காயிற்று பாஷ்யகாரரும் இவரும் உபதேசிப்பது.

256 அல்லாதார்க்கு ஸத்தா ஸம்ருத்திகள் தர்சநநுபவ கைங்கர்யங்களாலே, இவர்க்கு மங்களாசாஸநத்தாலே.

257 உகந்தருளின நிலங்களை அநுஸந்தித்தால், ஊணும் ஊக்கமும் இன்றிக்கே இவருடைய யாத்ரையே நமக்கெல்லார்க்கும் யாத்ரை யாகவேணும்.

258 ஆகையால் மங்களாசாஸநம் ஸ்வருப அநுரூப குணம்.

259 அநுகூலராகிறார் ஜ்ஞாந பக்தி வைராக்யங்கள் இட்டு மாறினாப் போலே, வடிவிலே தொடை கொள்ளலாம்படி யிருக்கும் பரமார்த்தர்.

260 ஒரு செய் நிரம்ப நின்றால் அசல் செய்பொசிந்துகாடுமா போலே, இவை இல்லாதார்க்கு இவர்க்களோட்டை ஸம்பந்தத்தாலே உறாவுதல் தீரக் கடவ தாயிருக்கும்.

261 ஆறுநீர் வரவு அணித்தானால் அதுக்கீடான அடையாளங்கள் உண்டாமா போலே, இந்த ஸ்வபாவவிசேஷங்கள் தன்னடையே விளையக்கடவதாயிருக்கும்.

262 இவற்றைக் கொண்டு சரம சரீரம் என்று தனக்குத் தானே அறுதியிடலாம்.

263 ப்ரதிகூல ராகிறார் தேஹாத்மாபிமாநிகளும், ஸ்வதந்த்ரரும், அந்யசேஷபூதரும் உபாயாந்தர நிஷ்டரும், ஸ்வப்ரயோஜநபரரும்.

264 இவர்களுக்கு உத்யேச்யரும், உபாய உபேயங்களும் பேதித்திருக்கும்.

265 தேஹாத்மாபிமாநிகளுக்கு உத்தேச்யர் தேஹவர்த்தகரான மநுஷ்யர்கள், உபாயம் அர்த்தம், உபேயம் ஜஹிக போகம்; ஸ்வதந்த்ரர்க்கு உத்தேச்யர் ஸ்வர்காதி போகபரர்; உபாயம் கர்மாநுஷ்டானம், உபேயம் ஸ்வர்காதி போகம்.

266 முதல் சொன்ன மூவரும் நிக்ரஹத்துக்கு இலக்கு; மற்றை இருவரும் அநுக்ரஹத்துக்கு இலக்கு.

267 மூவருடையவும் கர்மம் அநுபவ விநாச்யம்; நாலாம் அதிகாரிக்கு ப்ராயச்சித்த விநாச்யம்; ஐந்தாம் அதிகாரிக்கு புருஷகார விநாச்யம்.

268 உபாயம் ஸ்வீகார காலத்தில் புருஷ ஸாபேக்ஷமுமாய் புருஷகார ஸாபேக்ஷமுமாய் இருக்கும்; கார்ய காலத்தில் உபய நிரபேக்ஷமா யிருக்கும்.

269 ஸ்வப்ரயோஜநபரர் எல்லாரையும், ப்ரதிகூலராக நினைக்கலாமோ என்னில்.

270 இங்கு ஸ்வப்ரயோஜநம் என்கிறது ஆச்ரய தோஷ ஜங்யமானத்தை.

271 ஆகையாலே தோஷ மில்லை.

272 விஷய தோஷத்தாலே வருமவை எல்லாம் துஸ்த்யஜ்யமாயிறே யிருப்பது.

273 "ஊமையரோடு செவிடர் வார்த்தை" "கதம் அங்யத் இச்சதி"

274 இப்படி இவை இத்தனையும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும் போதைக்கு வஸ்த்யம்; ஆசார்ய ஸந்நிதியும் பகவத் ஸந்நிதியும். வக்தவ்யம்: ஆசார்ய வைபவமும் ஸ்வநிகஷர்மும், ஜப்தவ்யம்: குரு பரம்பரையும் த்வயமு, பரிக்ராஹ்யம்; பூர்வாசார்யருடைய வசனமும் அநுஷ்டானமும், பரித்யாஜ்யம்: அவைஷ்ணவ ஸஹவாஸமும் அபிமாநமும். கர்த்தவ்யம்: ஆசார்ய கைங்கர்யமும் பகவத் கைங்கர்யமும்.

275 கீழ்ச் சொன்ன பகவத் கைங்கர்யம் அறிவது சாஸ்த்ர முகத்தாலே; ஆசார்ய கைங்கர்யம் அறிவது சாஸ்த்ர முகத்தாலும் ஆசார்ய வசனத்தாலும்.

276 கைங்கர்யந்தான் இரண்டு.

277 அதாவது இஷ்டம் செய்கையும், அநிஷ்டம் தவிருகையும்.

278 இஷ்டாநிஷ்டங்கள் வர்ணாச்ரமங்களையும் ஆத்ம ஸ்வரூபத்தையும் அவலம்பித்திருக்கும்.

279 புண்யத்துக்கு அஞ்சுகிறவன் பாபத்தை பண்ணானிறே.

280 இவன் புண்யத்தை பாபம் என்றிருக்கும். அவன் பாபத்தை புண்யம் என்றிருக்கும். அவனுக்கு அது கிடையாது; இவன் அது செய்யான்.

281 கைங்கர்யந்தான் பக்தி மூல மல்லாதபோது பீதி மூலம் வரவேணும்.

282 அதுவும் இல்லாதபோது அதிகாரத்திலும், உபாய உபேயங்களிலும் அந்வய மின்றிக்கே ஒழியும்.

283 கைங்கர்யந் தன்னை பலஸாதந மாக்காதே பல மாக்கவேண்டும்.

284 அதாவது தான் கை ஏலாதே அவனைக் கையேற்கப் பண்ணுகை.

285 கொடுத்துக் கொள்ளாதே கொண்டதுக்கு கைக்கூலி கொடுக்கவேண்டும்.

286 ஸ்ரீ விதுரரையும், ஸ்ரீ மாலாகாரரையும், கூனியையும் போலே கிஞ்சித் கரித்தால் ஸ்வரூபம் நிறம் பெறுவது.

287 மடி தடவாத சோறும், சுரு நாறாத் பூவும், சுண்ணாம்பு படாத சாந்துமிறே இவர்கள் கொடுத்தது.

288 கைங்கர்ய தசை போலே முன்புள்ள தசைகளின் ஸ்வரூபத்தை உஜ்வல மாக்கவேண்டும்.

289 முன்பே நாலு தசை உண்டு

290 அதாவது ஜ்ஞாந தசையும், வரண தசையும், ப்ராப்தி தசையும், ப்ராப்யாநுபவ தசையும்.

291 ஜ்ஞாந தசையில் அஜ்ஞானத்தை முன்னிடும்; வரணதசையில் அபூர்த்தியை முன்னிடும்; ப்ராப்தி தசையில் ஆர்த்தியை முன்னிடும்; ப்ராப்யநுபவ தசையில் அபிநிவேசத்தை முன்னிடும்.

292 அஜ்ஞாநம் போவது ஆசார்யஜ் ஞானத்தாலே; அபூர்த்தி போவது ஈச்வர பூர்த்தியாலே, ஆரித்தி போவது அருளாலே; அபிநிவேசம் போவது அநுபவத்தாலே.

293 அஜ்ஞானத்துக்கு அடி அபராதம்; அபூர்த்திக்கு அடி ஜ்ஞாந பூர்த்தி; ஆர்த்திக்கு அடி அலாபம்; அபிநிவே சத்துக்கு அடி அழகு.

294 ஆர்த்தியும் அபிநிவேசமும் இருக்கும்படி அர்ச்சிராதி கதியிலே சொன்னோம்.

295 இவன் தனக்கு நாலு தசைகள் போல நாலு குணமுண்டு.

296 அதாவது ஜ்ஞாநமும், அஞாநமும், சக்தியும், அசக்தியும்.

297 இதுதான் அவனுக்கு முண்டு.

298 அவனுடைய ஜ்ஞானத்துக்கு இலக்கு இவனுடைய குணம்; அஜ்ஞானத்துக்கு இலக்கு இவனுடைய தோஷம்; சக்திக்கு இலக்கு இவனுடைய ரக்ஷணம், அசக்திக்கு இலக்கு பரித்யாகம்.

299 இவனுடைய ஜ்ஞாநத்துக்கு இலக்கு ஆசார்ய குணம்; அஜ்ஞாநத்துக்கு இலக்கு ஆசார்ய தோஷம்; சக்திக்கு இலக்கு ஆசார்ய கைங்கரியம்; அசக்திக்கு இலக்கு நிஷித்தாநுஷ்டாநம்.

300 நிஷித்தம் தானும் நாலு படியா யிருக்கும்.

301 அதாவது, அக்ருத்ய கரணமும், பகவதபசாரமும், பாகவதாபசாரமும், அஸஹ்யாபாசாரமும்.

302 அக்ருத்ய கரணமாவது – பர ஹிம்ஸை, பர ஸ்தோத்ரம், பரதார பரிக்ரஹம், பிர த்ரவ்யாபஹாரம், அஸத்யகதநம், அபக்ஷ்ய பக்ஷணம் தொடக்கமானவை.

303 பகவதபசாரமாவது; தேவதாந்தரங்களோ டொக்க ஈச்வரனை நினைக்கையும், ராம க்ருஷ்ணாத் யவதாரங்களில் மநுஷ்ய ஸஜாதீய தயா புத்தியும், வர்ணாச்ரமத்துக்கு விரோதமான உபசாரமும், அர்ச்சாவதாரத்தில் உபாதாந நிருபணமும், ஆத்மாபஹாரமு, பகவத் த்ரவ்யாபஹாரமும் தொடக்கமானவை.

304 பகவத் த்ரவ்யத்தைத் தான் அபஹரிக்கையும், அபஹரிக்கிறவர்க்களுக்கு ஸஹகரிக்கையும், அவர்கள் பக்கல் யாசிதமாகவும் அயாசிதமாகவும் பரிக்ரஹிக்கையும் பகவானுக்கு அநிஷ்டமா யிருக்கும்.

305 பாகவதாபசாரமாவது – அஹங்காரார்த்த காமங்களடியாக ஸ்ரீவைஷ்ணவர்க்களுக்குப் பண்ணும் விரோதம்.

306 அஸஹ்யாபசார மாவது – நிர்நிபந்தநமாக பகவத் பாகவத் விஷய மென்றால் அஸஹமானனாய் இருக்கையும், ஆசார்யபசாரமும், தத்பக்தாபசாரமும்.

307 இவை ஒன்றுக்கொன்று க்ரூரங்களுமாய், உபாய விரோதிகளுமாய் உபேய விரோதிகளுமாயிருக்கும்.

308 தான் ஹிதோபதேசம் பண்ணும்போது தன்னையும், சிஷ்யனையும் பலத்தையும் மாறாடி நினைக்கை க்ரூர நிஷித்தம்.

309 தன்னை மாறாடி நினைக்கையாவது – தன்னை ஆசார்யனாக் நினைக்கை; சிஷ்யனை மாறாடிகை, பலத்தை மாறாடி நினைக்கையாவது; த்ருஷ்ட ப்ரயோஜநத்தையும், சிஷ்யனுடைய உஜ்ஜீவநத்தையும், பகவத் கைங்கரியத்தையும், ஸஹவாஸத்தையும், பலமாக நினைக்கை.

310 நினையாதிருக்க இந்நாலும் பலமும் ஸித்திக்கிறபடி என் என்னில், சேஷபூதனான சிஷ்யன் நினைவாலே த்ருஷ்டபலம் ஸித்திக்கும்; ஈச்வரன் நினைவாலே உஜ்ஜீவநம் ஸித்திக்கும்; ஆசார்யன் நினைவாலே பகவத் கைங்கர்யம் ஸித்திக்கும்; உபகார ஸ்ம்ருதியாலே ஸஹவாஸம் ஸித்திக்கும்.

311 ஸாக்ஷாத் பலமும், ஆசார்யத்வமும் ஸித்திக்கிறபடி என் என்னில், தன் நினைவாலும், ஈச்வரன் நினைவாலும் ஸித்திக்கும்.

312 இப்படி யொழிய உபதேசிக்கில் இருவர்க்கும் ஸ்வரூப ஸித்தி இல்லை.

313 ஆசார்யனுக்கு சிஷ்யன் பக்கல் க்ருபையும், ஸ்வாசார்யன் பக்கல் பாரதந்த்ர்யமும் வேணும்.

314 க்ருபையாலே சிஷ்யன் ஸ்வரூபம் ஸித்திக்கும்; பாரதந்த்ர்யத்தாலே தன் ஸ்வரூபம் ஸித்திக்கும்.

315 நேரே ஆசார்யன் என்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உபதேசித்தவனை. 316 ஸம்ஸார வர்த்தகங்களுமாய் க்ஷுத்ரங்களுமான பகவத் மந்த்ரங்களை உபதேசிக்கிறவர்களுக்கு ஆசார்யத்வ பூர்த்தி இல்லை.

317 பகவந் மந்த்ரங்களை க்ஷுத்ரங்கள் என்கிரது பலத்வாரா.

318 ஸம்ஸார வர்த்தங்கள் என்கிறதும் அத்தாலே.

319 இதுதான் ஔபாதிகம்.

320 சேதனுடைய ருசியாலே வருகையாலே.

321 சிஷ்யன் என்பது ஸாத்யாந்தர நிவ்ருத்தியும், பலஸாதந சுச்ருஷையும், ஆர்த்தியும், ஆதரமும், அநஸூயையும் உடையவனை.

322 மந்த்ரமும், தேவதையும், பலமும், பலாநுபந்திகளும் பலஸாதநமும், ஐஹிகபோகமும் எல்லாம் ஆசார்யனே என்று நினைக்கக்கடவன்.

323 "மாதா பிதா யுவதய:" என்கிற ச்லோகத்தில் இவ்வர்த்தத்தைப் பரமாசார்யரும் அருளிச் செய்தார்.

324 இதுக்கடி உபகார ஸ்ம்ருதி.

325 உபகார ஸ்ம்ருத்திக்கு முதலடி ஆசார்யன் பக்கல் க்ருதஜ்ஞதை; முடிந்த நிலம் ஈச்வரன் பக்கல் க்ருதஜ்ஞதை.

326 சிஷ்யனும் ஆசார்யனும் அந்யோந்யம் ப்ரிய ஹிதங்களை நடத்தக் கடவர்கள்.

327 சிஷ்யன் தான் ப்ரியத்தை நடத்தக்கடவன்; ஈச்வரனைக் கொண்டு ஹிதத்தை நடத்தக்கடவன்; ஆசார்யன் மாறாடி நடத்தக்கடவன்.

328 சிஷ்யன் உகப்பிலே ஊன்றிப் போரும், ஆசார்யன் உஜ்ஜீவநத்திலே ஊன்றிப் போரும்.

329 ஆகையால் சிஷ்யன் ஆசார்யனது ஹர்ஷத்துக்கு இலக்காகை யொழியை ரோஷத்துக்கு இலக்காகைக்கு அவகாசமில்லை.

330 நிக்ரஹத்துக்கு பாத்ரமாம்போது அது ஹித ரூபமாகையாலே இருவர்க்கும் உபாதேயம்.

331 சிஷ்யனுக்கு நிக்ரஹ காரணம் த்யாஜ்யம்.

332 நிக்ரஹந்தான் பகவத் நிக்ரஹம் போலே ப்ராப்யாந்தர்கதம்.

333 ஆசார்யன் சிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப் பேணக்கடவன்; சிஷ்யன் ஆசார்யனுடைய தேஹத்தைப் பேணக்கடவன்.

334 இரண்டும் இருவர்க்கும் ஸவரூபமுமாய், பகவத் கைங்கர்யமுமா யிருக்கும்.

335 ஆசார்யனுக்கு தேஹ ரக்ஷணம் ஸ்வரூப ஹாநி; சிஷ்யனுக்கு ஆத்ம ரக்ஷணம் ஸ்வரூப ஹாநி.

336 ஆசார்யன் ஆத்ம ரக்ஷணம் பண்ணுமிடத்தில் அஹங்காரம் விரோதி; சிஷ்யன் தேஹ ரக்ஷணம் பண்ணுமிடத்தில் மமகாரம் விரோதி.

337 ஆசார்யன் தன்னுடைய தேஹ ரக்ஷணம் தன் வஸ்துவைக் கொண்டு பண்ணக்கடவன்; சிஷ்யன் ஸ்வதேஹ ரக்ஷணம் ஆசார்யன் வஸ்துவைக் கொண்டு பண்ணக்கடவன்.

338 ஆசார்யன் சிஷ்யன் வஸ்துவைக் கொள்ளக் கடவனல்லன்; சிஷ்யன் தன் வஸ்துவைக் கொடுக்கக் கடவனல்லன்.

339 கொள்ளில் மிடியனாம்; கொடுக்கில் கள்ளனாம்.

340 கொள் கொடை உண்டானால் ஸம்பந்தம் குலையும்.

341 இவன் மிடியனாகையாலே கொடான்; அவன் பூர்ணனாகையாலே கொள்ளான்.

342 அவனுக்குப் பூர்த்தியாலே ஸ்வரூபம் ஜீவத்தது; இவனுக்கு மிடியாலே ஸ்வரூபம் ஜீவித்தது.

343 ஆனால் சிஷ்யன் ஆசார்யனுக்குப் பண்ணும் உபகாரம் ஒன்றுமில்லையோ என்னில்.

344 ஆசார்யன் நினைவாலே உண்டு.

345 அதாவது ஜ்ஞாந வ்யவஸாய ப்ரேம ஸமாசாரங்கள்.

346 ஆசார்ய ப்ரீத்யர்த்தமாக இவனுக்குத் தவிர வேண்டுவது பகவத் த்ரவ்யத்தை அபகரிக்கையும், பகவத் போஜனத்தை விலக்குகையும், குரு மந்த்ர தேவதாபரிபவமும்.

347 பகவத் த்ரவ்ய அபஹாரமாவது – ஸ்வாதந்த்ர்யமும், அந்ய சேஷத்வமும், பகவத் போஜனத்தை விலக்குகையாவது – அவனுடைய ரக்ஷகத்வத்தை விலக்குகை.

348 அவனுடைய ரக்ஷகத்வ க்ரமம் ப்ரபந்ந பரித்ராணத்திலே சொன்னோம். குரு பரிபவமாவது: கேட்ட அர்த்ததின்படி அநுஷ்டியா தொழிகையும், அநதிகாரிகளுக்கு உபதேசிக்கையும். மந்த்ர பரிபவமாவது: அர்த்ததில் விஸ்ம்ருதியும், விபரீதார்த்த ப்ரதிபத்தியும். தேவதா பரிபவமாவது: கரணத்ரயத்தையும் அப்ராப்த விஷயங்களிலே ப்ரவணமாக்குகையும், தத்விஷயத்தில் ப்ரவண மாக்காதொழிகையும்.

349 இவனுக்கு சரீராவஸாநத்தளவும் ஆசார்ய விஷயத்தில், "என்னைத் தீமனங் கெடுத்தாய்", மருவித் தொழும் மனமே தந்தாய்" என்று உபகார ஸ்ம்ருதி நடக்கவேணும்.

350 மநஸ்ஸுக்குத் தீமையாவது; ஸ்வ குணத்தையும், பகவத் பாகவத தோஷத்தையும் நினைக்கை.

351 தோஷம் நினையா தொழிகிறது குணம் போலே உண்டா யிருக்கவன்று, இல்லாமையாலே.

352 தோஷ முண்டென்று நினைக்கில் அது பர தோஷமன்று, ஸ்வதோஷம்.

353 ஸ்வதோஷ மானபடி என் என்னில்.

354 ஸ்வதோஷத்தாலும் பந்தத்தாலும்.

355 ஸ்வதோஷ மில்லையாகில் குண ப்ரதிபத்தி நடக்கும்.

356 நடந்த தில்லையாகில் தோஷ ஜ்ஞானமே தோஷமாகும்.

357 இது தனக்கு அவஸரமில்லை.

358 ஸ்வதோஷத்துக்கும் பகவத் பாகவத் குணங்களுக்குமே காலம் போருமாகையாலே.

359 ஸம்ஸாரிகள் தோஷம், ஸ்வதோஷம் என்று நினைக்கக்கடவன்.

360 அதுக்கு ஹேது பந்த ஜ்ஞானம்.

361 "இறைப்பொழுதும் எண்ணோம்" என்கையாலே அதுதான் தோன்றாது.

362 தோன்றுவது நிவர்த்வநார்த்தமாக.

363 பிராட்டி ராக்ஷஸிகள் குற்றம் பெருமாளுக்கும் திருவடிக்கும் அறிவியாதாப் போலே, தனக்குப் பிறர்ச்செய்த குற்றங்களை பாகவத விஷயங்களில் அறிவிக்கக் கடவனல்லன்.

364 அறிவிக்க உரியவனகப்பட வாய் திறவாதே ஸர்வஜ்ஞ விஷயங்களுக்கும் மறைக்கும் என்னா நின்றதிறே.

365 குற்றஞ் செய்தவர் பக்கல் பொறையும், க்ருபையும், சிரிப்பும், உகப்பும், உபகார ஸ்ம்ருதியும் நடக்க வேணும்.

366 ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது, பகவத் குணாநுஸந்தாநம் அபயஹேது.

367 பயாபயங்கள் இரண்டும் மாறாடில் அஜ்ஞதையே ஸித்திக்கும்.

368 ஆனால் "நிலவான் இன்னம் எண்ணுகின்றாய்", "ஆற்றங்கரை வாழ் மரம் போல் அஞ்சுகின்றேன்" என்ற பாசுரங்களுக்கு அடி என் என்னில்.

369 பந்தாநுஸந்தாநம்

370 ப்ரஜை தெருவிலே இடறித் தாய் முதுகிலே குத்துமாபோலே நிருபாதிக பந்துவாய் சக்தனா யிருக்கிறவன் விலக்கா தொழிந்தால் அப்படிச் சொல்லலாமிறே.

371 ப்ரஜையைக் கிணற்றின் கரையினின்றும் வாங்காதொழிந்தால் தாயே தள்ளினாள் என்னக் கடவதிறே.

372 இவனுடைய அநுமதி பேற்றுக்கு ஹேது அல்லதாப் அல்லதாப்போலே, அவனுடைய அநுமதியும் இழவுக்கு ஹேதுவன்று.

373 இரண்டும் இருவர்க்கும் ஸ்வரூபம்.

374 இழவுக்கடி கர்மம்; பேற்றுக்கடி க்ருபை.

375 மற்றைப்படி சொல்லில் இழவுக்கு உறுப்பாம்.

376 எடுக்க நினைக்கிறவனைத் தள்ளினாய் என்கை எடாமைக் குறுப்பிறே.

377 "சீற்றமுள" என்ற அநந்தரத்திலே இந்த அர்த்தத்தைத் தாமே அருளிச் செய்தாரிறே.

378 சீற்றமுண்டு என்று அறிந்தால் சொல்லும்படி என் என்னில், அருளும், ஆர்த்தியும், அநந்யகதித்வமும் சொல்லப்பண்ணும்.

379 சீறினாலும் காலைக் கட்டிக்கொள்ளலாம்படி யிருப்பான் ஒருவனைப் பெற்றால் எல்லாம் சொல்லலாமிறே.

380 "க்ருபயா பர்யபாலயத்", "அரிசினத்தால்"

# நாலாம் ப்ரகரணம்

381 த்ரிபாத் விபூதியிலே பரிபூர்ண குணாநுபவம் நடவா நிற்க, அது உண்டது உருக்காட்டாதே தேசாந்த்ரகதனான புத்ரன் பக்கலிலே பித்ரு ஹ்ருதயம் கிடக்குமாபோலே, ஸம்ஸாரிகள் பக்கலிலே திருவுள்ளம் குடிபோய் இவர்களை பிரிந்தால் ஆற்றமாட்டாதே இவர்களோடே கலந்து பரிமாறுகைக்குக் கரண களேபரங்களைக் கொடுத்து, அவற்றை கொண்டு வ்யாபரிக்கைக் கீடான சக்தி விசேஷங்களையும் கொடுத்து, கண் காண நிற்கில் ஆணையிட்டு விலக்குவார்களென்று கண்ணுக்கு தோற்றாதபடி, உறங்குகிற ப்ரஜையைத் தாய் முதுகிலே அணைத்துக்கொண்டு கிடக்குமா போலே, தான் அறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக விடமாட்டாதே அகவாயிலே அணைத்துக்கொண்டு, ஆட்சியில் தொடர்ச்சி நன்றென்றுவிடாதே ஸத்தையை நோக்கி உடன்கேடனாய், இவர்கள் அஸத் கர்மங்களிலே ப்ரவர்த்திக்கும்போது மீட்கமாட்டாதே அநுமதிதானத்தைப் பண்ணி, உதாஸீநரைப் போலே இருந்து மீட்கைக்கு இடம் பார்த்து, நன்மை என்று பேரிடலாவதோர் தீமையும் காணாதே, நெற்றியைக் கொத்திப் பார்த்தால் அப்ராப்யம் என்று கண்ணநீரோடே மீளுவது, தனக்கேற இடம் பெற்ற வளவிலே "என் ஊரைச் சொன்னாய், என் பேரைச் சொன்னாய், என் அடியாரை நோக்கினாய் அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கு ஒதுங்க நிழலைக் கொடுத்தாய்" என்றாப் போலே சிலவற்றை ஏறிட்டு, மடிமாங்காயிட்டுப் பொன் வாணியன் பொன்னை உரைகல்லிலே உரைத்து மெழுகாலே எடுத்துக் கொல் கழஞ்சு என்று திரட்டுமா போலே, ஜந்ம பரம்பரைகள்தோறும் யாத்ருச்சிகம், ப்ராஸங்கிகம், ஆநுஷங்கிகம் என்கிற ஸுக்ருத விசேஷங்களைக் கல்பித்துக்கொண்டு, தானே அவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்.

382 லலிதா சரிதாதிகளிலே இவ்வர்த்தம் சுருக்க மொழியக் காணலாம்.

383 அஜ்ஞரான மநுஷ்யர்கள் வாளா தந்தான் என்றிருப்பர்கள்.

384 ஜ்ஞாநவான்கள், "இன்றென்னை பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான்", "எங்நன்றி செய்தேனா என் நெஞ்சில் திகழ்வதுவே", "நடுவே வந்து உய்யக் கொள்கின்ற நாதன்" , "அறியாதான அறிவித்த அத்தா ! நீ செய்தன அடியேன் அறியேனே", "பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டாய்", "என்னைத் தீ மனங் கெடுத்தாய்", "மருவித் தொழும் மனமே தந்தாய்" என்று ஈடுபடாநிற்பர்கள்.

385 பாஷ்யகாரர் காலத்திலே ஒருவன் பெருமாள் புறப்பட் டருளுந்தனையும் பார்த்துப் பெரிய திருமண்டபத்துக்குக் கீழாக முதலிகள் எல்லாரும் திரள இருந்தவளவிலே இவ்வர்த்தம் ப்ரஸ்துதமாக, பின்பு பிறந்த வார்த்தைகளை ஸ்மரிப்பது.
386 ஆகையால் அஜ்ஞாதமான நன்மைகளையே பற்றாசாகக் கொண்டு கடாக்ஷியா நிற்கும்.

387 இவையுங்கூட இவனுக்கு விளையும்படியேறே இவைதன்னை முதலில் அவன் ஸ்ருஷ்டித்தது. 388 அதுதன்னை நிருபித்தால் இவன்தனக்கு ஒன்றும் செய்யவேண்டாதபடியா யிருக்கும்.

389 பழையதாக உழுவது, நடுவது, விளைவதாய்ப்போரும் க்ஷேத்ரத்திலே உதிரி முளைத்து பலபர்யந்தமாமாபோலே, இவைதான் தன்னடையே விளையும் படியாயிற்று, பக்தி யுழவன் பழம் புனத்தை ஸ்ருஷ்டித்த கட்டளை.

390 அவைதான் எவை என்றால்,

391 பூர்வ க்ருத புண்யா புண்ய பலன்களை சிரகாலம் புஜித்து, உத்தர காலத்தில் வாஸனை கொண்டு ப்ரவாத்க்கு மத்தனை என்னும்படிக் கையொழிந்த தசையிலே "நாம் ஆர்?" "நாம் நின்ற நிலை ஏது?" "நமக்கு இனிமேல் போக்கடி ஏது?" என்று பிறப்பன சில நிருப்பண விசேஷங்கள் உண்டு, அவையாதால், முன்பு சொன்னவை யாதல்.

392 "யதாஹி மோஷகா: பாங்தே" என்று தொடங்கி இதனுடைய க்ரமத்தை பகவத் சாஸ்த்ரத்திலே சொல்லிற்று.

393 "வெற்தே அருள் செய்வர்" என்று இவ்வர்த்தத்தை ஸ்பஷ்டமாக அருளிச் செய்தாறிறே.

394 "செய்வார்க்கட்கு" என்று அருளுக்குஹேதுஸுக்தரும் என்னா நின்றதே என்னில், அப்போது "வெறிதே" என்ற இடம் சேராது.

395 பகவதாபிமுக்யம் ஸுக்ருதத்தாலன்றிக்கே பகவத் க்ருபையாலே பிறக்கிறது. அத்வேஷம் ஸுக்ருதத்தாலே என்னில், இந்த பல விசேஷத்துக்கு அத்தை ஸாதநமாக ஒண்ணாது.

396 சாஸ்த்ரமும் விதியாதே தாமும் அறியாதே யிருக்கிற இத்தை ஸுக்ருத மென்று நாம் பேரிடுகிறபடி என் என்னில், நாம் அன்று, ஈச்வரன் என்று கேட்டிருக் கையாயிருக்கும்.

397 இவ்வர்த்த விஷயம்மக ஆழ்வார்கள் பாசுரங்களில் பரஸ்பர விருத்தம் போலே தோன்றுமவற்றில் சொல்லுகிற பரிஹாரமும், முற்றுமுண்டான வக்தவ்யங்களும் விஸ்தர பயத்தாலே சொல்லுகிறிலோம்.

398 ஆகையால் இவன் விழுவனான தசையிலுங்கூட உஜ்ஜீவிக்கைக்கு க்ருஷி பண்ணின ஈச்வரனை அநுஸந்தித்தால் எப்போதும் நிர்ப்பரனாயே இருக்குமத்தனை.

399 எதிர்ச்சூழல் புக்கு.

400 ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரை வளைவாரைப் போலே வ்யாப்தியும்.

401 ஸ்ருஷ்ட் யவதாராதிகளைப் போலே ஸ்வார்த் தமாக என்றிறே ஜ்ஞாநாதிகர் அநுஸந்திப்பது.

402 கர்ம பலம் போலே க்ருபா பலமும் அனுபவித்தே தீரவேணும்.

403 க்ருபை பெருகப் புக்கால் இருவர் ஸ்வாதந்த்ர்யத்தாலும் தகைய வொண்ணாதபடி இரு கரையும் அழியப் பெருகும். 404 பயஹேது கர்மம், அபயஹேது காருண்யம்.

405 பயாபயங்கள் இரண்டும் மாறி மாறி ப்ராப்தியளவும் நடக்கும்.

406 நிவர்த்ய ஜ்ஞாநம் பயஹேது, நிவர்த்தக ஜ்ஞாநம் அபயஹேது.

407 ஸ்வதந்த்ரனை உபாயமாகத் தான் பற்றின போதிறே இப்ரஸங்கந்தான் உள்ளது.

408 உண்டபோது ஒரு வார்த்தையும், உண்ணாதபோது ஒரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேர் உண்டிறே அவர்கள் பாசுரங் கொண்டன்று இவ்வர்த்தம் அறுதியிடுவது.

409 அவர்க்களைச் சிரித்திருப்பார் ஒருவர் உண்டிறே; அவர் பாசுரங் கொண்டு இவ்வர்த்தம் அறுதியிடக்கடவோம்.

410 ஸ்வரூபத்துக்கும் ப்ராப்யத்துக்கும் சேர்ந்திருக்க வேணுமிறே ப்ராபகம்.

411 வடுகநம்பி ஆழ்வானையும் ஆண்டானையும் "இருகரையர்" என்பர்.

412 ப்ராப்யத்துக்கு ப்ரதம் பர்வம் ஆசார்ய கைங்கர்யம், மத்யம் பர்வம் பகவத் கைங்கர்யம், சரம பர்வம் பாகவத கைங்கர்யம்.

413 ஸ்வரூப ப்ராப்தியை சாஸ்த்ரம் புருஷார்த்தமாகச் சொல்லாநிற்க. ப்ராப்தி பலமாய்க் கொண்டு கைங்கர்யம் வருகிறாப் போலே ஸாத்ய விவ்ருத்தியாய்க்கொண்டு சரம பர்வம் வரக்கடவது.

414 இதுதான் துர்ப்பலம்.

415 விஷய ப்ரவணனுக்கு அத்தை விட்டு பகவத் விஷயத்திலே வருகைக்குள்ள அருமை போலன்று ப்ரதம பர்வத்தைப் விட்டு சரம பர்வத்திலே வருகைக்குள்ள அருமை.

416 அங்கு தோஷ தர்ச்சநத்தாலே மீனலாம்; இங்கு அது செய்ய ஒண்ணாது.

417 தோஷம் உண்டானாலும் குணம் போலே உபாதேயமாயிருக்கும்.

418 லோக விபரீதமாயிறே இங்கிருப்பது.

419 குணம் உபாதேயமாகைக்கு ஈடான ஹேது தோஷத்துக்கு உண்டிறே.

420 நிர்க்ருணன் என்று வாய் மூடுவதற்கு முன்னே க்ருபாவாங் என்று சொல்லும்படி யிருந்ததிறே.

421 இப்படிச் சொல்லும்படி பண்ணிற்று க்ருபையாலே என்று ஸ்நேஹமும் உபகார ஸ்ம்ருதியும் நடந்ததிறே.

422 நிர்க்ருணனாக சங்கித்துச் சொல்லும் அவஸ்தையிலும் காரணத்தை ஸ்வகதமாகவிறே சொல்லிற்று.

423 குண தோஷங்கள் இரண்டும் க்ஷுத்ர புருஷார்த்தத்தையும், புருஷார்த்த காஷ்டையையும் குலைக்கும்.

424 நித்ய சத்ருவாயிறே இருப்பது.

425 இப்படி ப்ராப்யத்தை அறுதியிட்டால், அதுக்கு ஸத்ருசமாக வேணுமிறே ப்ராபகம்.

426 அல்லாதபோது ப்ராப்ய ப்ராபகங்களுக்கு ஐக்யமில்லை.

427 ஈச்வரனைப் பற்றுகை கையைப் பிடித்துக் கார்யங்கொள்ளுமோ பாதி; ஆசார்யனைப் பற்றுகை காலைப்பிடித்துக் கார்யங் கொள்ளுமோ பாதி.

428 ஆசார்யன் இருவர்க்கும் உபகாரகன்.

429 ஈச்வரனுக்கு சேஷ வஸ்துவை உபகரித்தான்: சேதனனுக்கு சேஷியை உபகரித்தான்.

430 ஈச்வரனும் ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டிருக்கும்.

431 ஆகையிறே குரு பரம்பரையிலே அந்வயித்ததும் ஸ்ரீ கீதையும், அபயப்ரதாநமும் அருளிச் செய்ததும்.

432 ஆசார்யனுக்கு ஸத்ருச ப்ரத்யுபகாரம் பண்ணலாவது, விபூதி சதுஷ்டயமும், ஈச்வர த்வயமும் உண்டாகில்.

433 ஈச்வர ஸம்பந்தம் பந்த மோக்ஷங்கள் இரண்டுக்கும் பொதுவா யிருக்கும்; ஆசார்ய ஸ்ம்பந்தம் மோக்ஷத்துக்கே ஹேதுவாயிருக்கும்.

434 பகவல் லாபம் ஆசார்யனாலே.

435 ஆசார்ய லாபம் பகவானாலே.

436 உபகார்ய வஸ்து கௌரவத்தாலே ஆசார்யனிற்காட்டில் மிகவும் உபகாரகன் ஈச்வரன்.

437 ஆசார்ய ஸம்பந்தம் குலையாதே கிடந்தால் ஜ்ஞாந பக்தி வைராக்யங்கள் உண்டாக்கிக் கொள்ளலாம்; ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அவை உண்டானாலும் ப்ரயோஜந மில்லை.

438 தாலி கிடந்தால் பூஷணங்கள் பூணலாம்; தாலி போனால் பூஷணங்கள் எல்லாம் அவத்யத்தை விளைவிக்கும்.

439 தாமரையை அலர்த்தக் கடவ ஆதித்யன்தானே நீரை பிரிந்தால் அத்தை உலர்த்துமா போலே, ஸ்வரூப விகாஸத்தைப் பண்ணும் ஈசுவரன்தானே ஆசார்ய ஸம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப்பண்ணும்.

440 இத்தை யொழிய பகவத் ஸம்பந்தம் துர்லபம்.

441 இரண்டும் அமையாதோ, நடுவில் பெருங்குடி என் என்னில்.

442 கொடியைக் கொன்கொம்பிலே துவக்கும்போது சுள்ளிக்கால் வேண்டுமாபோலே ஆசார்யாங்வயத்துக்கும் வேணும்.

443 ஸ்வாபிமாநத்தாலே ஈச்வராபிமாநத்தைக் குலைத்துக்கொண்ட இவனுக்கு ஆசார்யாபிமாந மொழிய கதியில்லை என்று பிள்ளை பலகாலும் அருளிச்செய்யக் கேட்டிருக்கையா யிருக்கும்.

444 ஸ்வ ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே பக்தி நழுவிற்று.

445 பகவத் ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே ப்ரபத்தி நழுவிற்று.

446 ஆசார்யனையும் தான் பற்றும் பற்று அஹங்காரகர்ப்ப மாகை யாலே காலன் கொண்டு மோதிரம் இடுமோ பாதி.

447 ஆசார்யனே உத்தாரகம்.

448 கைப்பட்ட பொருளைக் கைவிட்டுப் புதைத்த பொருளைக் கணிசிக்கக் கடவனல்லன்.

449 விடாய் பிறந்தபோது கரஸ்தமான உதகத்தை உபேக்ஷித்து, ஜீமூத ஜலத்தையும் ஸாகர ஸலிலத்தையும் ஸரித்ஸலிலத்தையும், வாபீ கூப பயஸ்ஸுக்களையும் வாஞ்சிக்கக் கடவனல்லன்.

450 பாட்டுக் கேட்கு மிடமும், கூப்பீடு கேட்கு மிடமும், குதித்த விடமும், வளைத்த விடமும், ஊட்டு மிடமும் எல்லாம் வகுத்த விடமே என்றிருக்கக் கடவன்.

451 இவனுக்கு ப்ரதிகூலர் ஸ்வதந்த்ரரும், தேவதாந்தரபரரும்; அநுகூலர் ஆசார்ய பரதந்த்ரர்; உபேக்ஷணீயர் ஈச்வர பரதந்த்ரர்.

452 ஜ்ஞாநாநுஷ்டானங்கள் இரண்டும் அல்லாதார்க்கு உபாயாங்கமா யிருக்கும்; இவனுக்கு உபேயங்கரமாயிருக்கும்.

453 இவனுக்கு நிஷித்தாநுஷ்டாநம் தன்னையும் பிறரையும் நசிப்பிக்கையாலே த்யாஜ்யம்.

454 தான் நசிக்கிறது மூன்று அபசாரத்திலும் அங்வயிக்கையாலே; பிறர் நசிக்கிறது தன்னை அநாதரித்தும், தன் அநுஷ்டானத்தை அங்கீகரித்தும்.

455 விஹித போகம் நிஷித்த போஜநம் போலே லோக விருத்தமு முன்று; நரகஹேதுவு மன்று; ஆயிருக்கச்செய்த ஸ்வரூப விருத்தமுமாய், வேதாந்த விருத்தமுமாய், சிஷ்டகர்ஹிதமுமாய், ப்ராப்ய ப்ரதிபந்தகமுமாய் இருக்கையாலே த்யாஜ்யம்.

456 போக்யதா புத்தி குலைந்து, தர்மபுத்யா ப்ரவர்த்தித்தாலும் ஸ்வரூபம் குலையும்.

457 "க்ஷேத்ராணி மித்ராணி" என்கிற ச்லோகத்தில் அவஸ்தை பிறக்க வேணும் ஸ்வரூபம் குலையாமைக்கு.

458 ப்ராப்ய விபூதியில் ப்ராவண்யமும், த்யாஜ்ய விபூதியில் ஜிஹாஸையும், அநுபவ அலாபத்தில் ஆத்மதாரண அயோக்யதையும், உபாய சதுஷ்டயத்துக்கும் வேணும்.

459 "பழுதாகாது ஒன்று அறிந்தேன்" என்கிற பாட்டை பூர்வ உபாயத்துக்கு ப்ரமாணமாக அநுஸந்திப்பது.

460 "நல்ல என் தோழி", "மாறாய தானவனை" என்கிற பாட்டுக்களையும், ஸ்தோத்ரத்திலே முடிந்த ச்லோகத்தையும், "பசுர் மநுஷ்ய:" என்கிற ச்லோகத்தையும் இதுக்கு ப்ரமாணமாக அநுஸந்திப்பது.

461 ஆசார்யாபிமாநந்தான் ப்ரபத்தி போலே உபாயாந்தரங்களுக்கு அங்கமுமாய் ஸ்வதந்த்ரமுமா யிருக்கும்.

462 பக்தியில் அசக்தனுக்கு ப்ரபத்தி; ப்ரபத்தியில் அசக்தனுக்கு இது.

463 இது ப்ரதமம் ஸ்வரூபத்தை பல்லவித மாக்கும், பின்பு புஷ்பிதமாக்கும், அநந்தரம் பல பர்யந்தமாக்கும்.

சரமபர்வ நிஷ்டாப்ரகரணம் ஸமாப்தம்.<br>பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்<br>ஜீயர் திருவடிகளே ஶரணம்<br>ஸ்ரீவசநபூஷணம் முற்றிற்று.